ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ அக்கும் புலியின் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ அக்கும் புலியின் ॥

## திருக்குறுங்குடி - 2

‡அக்கும் புலியின்⋆ அதளும் உடையார்⋆ அவர் ஒருவர்
பக்கம் நிற்க நின்ற⋆ பண்பர் ஊர்போலும்⋆
தக்க மரத்தின் தாழ் சினையேறி⋆ தாய் வாயில்
கொக்கின் பிள்ளை⋆ வெள்ளிறவுண்ணும் குறுங்குடியே (1)

துங்கார் அரவத்⋆ திரை வந்துலவத்⋆ தொடு கடலுள்
பொங்கார் அரவில் துயிலும்⋆ புனிதர் ஊர்போலும்⋆
செங்கால் அன்னம்⋆ திகழ் தண் பணையில் பெடையோடும்⋆
கொங்கார் கமலத்து⋆ அலரில் சேரும் குறுங்குடியே (2)

வாழக் கண்டோம்⋆ வந்து காண்மின் தொண்டீர்காள்⋆
கேழல் செங்கண்⋆ மாமுகில் வண்ணர் மருவும் ஊர்⋆
ஏழைச் செங்கால்⋆ இன் துணை நாரைக்கிரை தேடி⋆
கூழைப் பார்வைக்⋆ கார் வயல் மேயும் குறுங்குடியே (3)

சிர முன் ஐந்தும் ஐந்தும்⋆ சிந்தச் சென்று⋆ அரக்கன்
உரமும் கரமும் துணித்த⋆ உரவோன் ஊர்போலும்⋆
இரவும் பகலும்⋆ ஈன் தேன் முரல⋆ மன்றெல்லாம்
குரவின் பூவே தான்⋆ மணம் நாறும் குறுங்குடியே (4)

கவ்வைக் களிற்று மன்னர் மாளக்⋆ கலி மான் தேர்
ஐவர்க்காய்⋆ அன்றமரில் உய்த்தான் ஊர்போலும்⋆
மை வைத்திலங்கு⋆ கண்ணார் தங்கள் மொழியொப்பான்⋆
கொவ்வைக் கனிவாய்க்⋆ கிள்ளை பேசும் குறுங்குடியே (5)

தீநீர் வண்ண⋆ மா மலர் கொண்டு விரையேந்தி⋆
தூநீர் பரவித்⋆ தொழுமின் எழுமின் தொண்டீர்காள்⋆
மாநீர் வண்ணர்⋆ மருவி உறையும் இடம்⋆ வானில்
கூனீர் மதியை⋆ மாடம் தீண்டும் குறுங்குடியே (6)

வல்லிச் சிறு நுண்ணிடையாரிடை⋆ நீர் வைக்கின்ற⋆
அல்லல் சிந்தை தவிர⋆ அடைமின் அடியீர்காள்⋆
சொல்லில் திருவே அனையார்⋆ கனிவாய் எயிறொப்பான்⋆
கொல்லை முல்லை⋆ மெல்லரும்பீனும் குறுங்குடியே (7)

நாரார் இண்டை⋆ நாள் மலர் கொண்டு நம் தமர்காள்⋆
ஆரா அன்போடு⋆ எம்பெருமான் ஊர் அடைமின்கள்⋆
தாரா வாரும்⋆ வார் புனல் மேய்ந்து வயல் வாழும்⋆
கூர் வாய் நாரை⋆ பேடையொடாடும் குறுங்குடியே (8)

நின்ற வினையும் துயரும் கெட⋆ மா மலர் ஏந்தி⋆
சென்று பணிமின் எழுமின்⋆ தொழுமின் தொண்டீர்காள்⋆
என்றும் இரவும் பகலும்⋆ வரி வண்டிசை பாட⋆
குன்றின் முல்லை⋆ மன்றிடை நாறும் குறுங்குடியே (9)

‡சிலையால் இலங்கை செற்றான்⋆ மற்றோர் சின வேழம்⋆
கொலையார் கொம்பு கொண்டான் மேய⋆ குறுங்குடிமேல்⋆
கலையார் பனுவல் வல்லான்⋆ கலியன் ஒலி மாலை⋆
நிலையார் பாடல் பாடப்⋆ பாவம் நில்லாவே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥